	[really	doctor	what	say is he Hon.]

Really? what does the doctor say?

rāmuvin̲ man̲ayvi	ṭaypāyṭā[25]	irukkumōn̲n̲u[26]	cantēkap
இராமுவின் மனைவி	டைபாய்டாக	இருக்குமோ என்று	சந்தேகப்
	[typhoid as	shall present doubt Quot.	suspects S

---

25. The noun takes - *ā* ஆய் to express manner sense and then *iru* இரு the be verb follows is.

26. *irukkumōn̲n̲u* < [*irukkum* (F.V.) - *ō* (Doubtful Part.) - *n̲n̲u* (Quot.)] இருக்கும் - ஓ என்று

The particle *ō* ஓ is used for different functions and one among them is to express doubt. It is added to the form which is in doubtful situation.

paṭuṟāru.[27]	itō,	ṭāktar	vaṟāṟu.
படுகிறார்.	இதோ,	மருத்துவர்	வருகிறார்.
he (Hon.)	here is	doctor	comeis he (Hon.)]

He suspects that it may be typhoid. Here comes the doctor.

ṭāktar varutal **Doctor's arrival**

மருத்துவர் வருதல்

rāmuviṉ maṉayvi	vaṇakkam	ṭākṭar.	
இராமுவின் மனைவி	வணக்கம்	டாக்டர்.	
	Good morning	doctor.	
ṭākṭar	vaṇakkam 'mā !	uṅka	vīṭṭukkārar[28]
மருத்துவர்	வணக்கம்மா !	உங்கள்	வீட்டுக்காரர்
	[good morning lady	your	husband

---

27. *cantēkap paṭu* 'suspect' 'be doubt'. The lexical item *cantēkam* சந்தேகம் (N) expresses 'doubt' suspecious meaning. The verb *cantēkap paṭu* சந்தேகப்படு is derived by adding the verbalizer *paṭu* படு to the noun *cantēkam* சந்தேகம். c. f. 10.8.

28. *vīṭṭukkārar* literaly, means 'house owner' 'one belong the house and it also means 'husband' when one refers one's husband; the feminine form is *vīṭṭukkāri* வீட்டுக்காரி.

	ippa	eppaṭi	irukkāru.	
	இப்பொழுது	எப்படி	இருக்கிறார்?	
	now	how	present is he Hon.]	
	Goodmorning lady. Now how is your husband?			
rāmuvin manaỵvi	joram	koñcam	koṟeñca	mātiri[29]
இராமுவின் மனைவி	காய்ச்சல்	கொஞ்சம்	குறைந்தது	மாதிரி
	[fever	a little	which decresed	seems
	irukkutu-ṅka.			
	இருக்கிறதுங்க.			
	present is it-Hon.]			
	The fever seems to have decreased a little.			
ṭākṭar	vānti[30]	ētum	eṭuttārā?	
மருத்துவர்	வாந்தி	ஏதும்	எடுத்தாரா?	
	[vomiting	any-thing	took he (Hon.)-Int.]	
	Has he vomited?			

---

29. *mātiri* மாதிரி 'like' 'similar' when comes after the R. P., it expresses 'seems', sense.

30. *vānti* வாந்தி (N) 'vomiting' is converted into a verb by adding *eṭu* எடு. Here *eṭu* looses the primary meaning 'take' and functions as a verbalizer. *vāntiyeṭu* வாந்தியெடு (V) 'vomit'

rāmuvin manayvi	illiṅkā.			
இராமுவின் மனைவி	இல்லைங்க.			
	No, please.			
tākṭar	cāppiṭa	ētum	koṭuttīnkḷā?	
மருத்துவர்	சாப்பிட	ஏதும்	கொடுத்தீர்களா?	
	[to eat	anything	gave you (Hon.) Int.]	
	Have you given (him) anything to eat ?			
	[Did you give (him)...]			
rāmuvin manayvi	hārliks	maṭṭum	kuṭiccāṅka.	vēṟe
இராமுவின் மனைவி	ஹார்லிக்ஸ்	மட்டும்	குடித்தார்கள்.	வேறு
	[Horlicks	only	drank-he (Hon.)	else
	etuvum	koṭukkale.		
	எதுவும்	கொடுக்கவில்லை.		
	anything	not give]		
	He took (some) horlicks only. (I) did not give (him) anything else.			
ṭākṭar	cari,	ippo	joram	koṟeñcutāṉ
மருத்துவர்	சரி,	இப்பொழுது	காய்ச்சல்	குறைந்துதான்
	[O. K.	now	fever	having decreased Emph.]

irukku.	rattam	paricōtanay-kku k
இருக்கிறது.	இரத்தம்	பரிசோதனைக்குக்
present is (it)	blood	testing for S
koṭuttirukkēṉ	risalṭu	vanta
கொடுத்திருக்-கிறேன்.	முடிவு	வந்த
have given-I	result/ report	which come
piṉṉāle-tāṉ [31]	eṉṉa	kāccal' eṉṉu
பின்னால்தான்	என்ன	காய்ச்சல் என்று
afterwards only	what	fever Quot.
colla	muṭiyum. [32]	
சொல்ல	முடியும்.	
to tell	capable]	

---

31. *vanta piṉṉāle* வந்த பின்னால் 'after coming' is an adverbial clause construction and it is constituted by the R. P. (*vanta* வந்த) and the adverbial particle (*piṉṉāle* பின்னால்). *piṉṉāle* பின்னால் 'afterwards' (time notion) always comes after a past R.P. *piṉṉāle* 'behind' also functions as a post position and as such it comes after a noun. *avaṉ eṉakkup piṉṉāle irukkiṟaṉ* 'He sits behind me'.

32. *muṭiyum* முடியும் expresses 'capability' sense and it comes after the R.P. forms only. Its negative form is *muṭiyātu* முடியாது 'impossible' 'uncapable'.

O. K. Now the fever is decreased. I heve sent (his) blood for testing. I can diagnose the fever, only after the report arrives. [After the report's arrival only (it is) possible to say what fever (is it)].

rāmuviṉ maṉayvi	appaṭīṅkaḷā?			
இராமுவின் மனைவி	அப்படிங்களா?			
	Really?			
ṭākṭar	cari,	rāttiri	maṟupaṭi-y-um	vantu
மருத்துவர்	சரி,	இரவு	மறுபடியும்	வந்து
	[O. K.	night	again S-Incl.	having come
	pākkiṟēṉ.			
	பார்க்கிறேன்.			
	see is I]			
	O.K. Night, I will come again and see (him.)			
rāmuviṉ maṉayvi	cariṅka.			
இராமுவின் மனைவி	சரிங்க.			
	O.K.			

rāmuvōṭu pēcutal Talking with Ramu

இராமுவுடன் பேசுதல்

rāmu yāru, iḷaṅkōvaṉā?

இராமு யார், இளங்கோவனா?

[who Ilangovan Int.]

Who (is it)? Is (it) Ilangovan?

iḷaṅkōvaṉ āmā rāmu ! entirikkātīṅka.[33]

இளங்கோவன் ஆமாம் இராமு ! எழ வேண்டாம்.

[yes Ramu get up don't Hon.

appaṭiyē paṭuttukkuṅka.[34]

அப்படியே படுத்துக்கொள்ளுங்கள்.

in that manner-Emph. lie down yourself Hon.]

Yes Ramu. Pleass don't get up. Please lie down as you are.

---

33. *entirikkātīṅka* < [*entiri* 'get up' (V. St.) *-kk* (L. M.) *āt* (Neg) *-īṅka*]. *īṅka* - ஈர்கள் is the plural as well as the honorific singular suffix which comes in the imperative negative form. *pōṭ-āt-īṅka* > *pōṭātiṅka* போட் - அத்-ஈர்கள் > போடாதீர்கள் 'don't put.' c. f. 3. 22

எழ வேண்டாம் 'need not get up' < [எழ (Int. of எழு 'get up') - வேண்டாம் 'need not']

In ST also instead of in the imperative it can be expressed like the LT form *entirikka vēṇṭām* 'need not get up'.

34. *paṭuttukkuṅka* < [*paṭuttu* (V.P. of *paṭu* 'ie down') - *k* (L.M.) *-ku* (Non. Refl. Aux) - *ṅka* (Hon.)]
படுத்துக்-கொள்-ள் (S)-உங்கள்.

rāmu	eppo	vantīṅka?			
இராமு	எப்பொழுது	வந்தீர்கள்?			
	[when	came you Hon.]			
	When did you come?				
iḷaṅkōvaṉ	koñca	nērattukku[35]	muṉṉāle	vantēṉ.	
இளங்கோவன்	கொஞ்ச	நேரத்திற்கு	முன்னால்	வந்தேன்.	
	[some	time to	before	came - I	
	cari !	ippo	eppaṭi	irukku?	
	சரி!	இப்பொழுது	எப்படி	இருக்கிறது?	
	O. K.	now	how	present is (it)]	
	I came a few minutes ago. O. K.! now, how is (the fever)? [how is it?]				
rāmu	paravāyille.	oṭampu	valitāṉ		
இராமு	பரவாயில்லை.	உடம்பு	வலிதான்		
	[not bad	body	pain Emph.		
	atikamāyirukku.[36]	rompa	kuḷir - utu.		
	அதிகமாக இருக்கிறது.	மிகவும்	குளிர்கிறது.		
	more present is (it)	very	cool - (is) it]		

35. Dative form of *nēram* - நேரம் 'time'.

36. *atikamāyirukku* - < [*atikamāy* (Adv) - *irukku*]
atikamāy < [*atikam* (N 'more', 'high') - *āy* (Advr.)]
அதிகமாக < [அதிகம்-ஆக]

Not bad. I have severe body pain. [Only the body pain is severe.] (I) feel very cool.

iḷaṅkōvaṉ	appaṭiyā !	nallā	pōttikkīṅka.[37]
இளங்கோவன்	அப்படியா!	நன்றாகப்	போர்த்திக் கொள்ளுங்கள்.
	[is it so	well	cover yourself
	ippe	ētāvatu	cāppiṭurīṅkaḷā?
	இப்பொழுது	ஏதாவது	சாப்பிடுகிறீர்களா?
	now	anything	eat is you (Hon.)-Int.]

I see ! Plesse cover yourself well. Now are you eating anything?

rāmu	ippo	oṇṇum	vēṇṭām.
இராமு	இப்பொழுது	ஒன்றும்	வேண்டாம்.
	[now	even one	not want
	vānti	vaṟa	mātiri-y-irukku.
	வாந்தி	வருகிற	மாதிரி இருக்கிறது.
	vomiting	which comes	like-S-present is (it)]

---

37. *pōttikkīṅka* < [*pōtti* (V.P. of *pōttu* (cover) - *k* (L.M.) - *ki* (Non. Refl. Aux.) - (*ṅka*Hon.)].

The Auxiliaries *ku, ko* and *ki* are free varients before the honorific suffix.

Now, (I) don't want anything. (I) feel vomiting. [(I) feel like vomiting comes.]

ilaṅkōvaṉ cari, nallā-t tūṅkuṅka.

இளங்கோவன் சரி, நன்றாக-த் தூங்குங்கள்.

[O.K. nicely-S sleep-Hon.

nāḷeykku maṟupaṭiyum vaṟōm.

நாளைக்கு மறுபடியும் வருகிறோம்.

tomorrow again come are we]

O.K. Please sleep well. We (will) come again tomorrow.

rāmu cari, iḷaṅkōvaṉ.

இராமு சரி, இளங்கோவன்.

O.K. Ilankovan.

iḷaṉkōvaṉ cari'mmā pōyṭṭu, nāḷekk:

இளங்கோவன் சரி அம்மா போய்விட்டு நாளைக்கு

[O.K. lady having gone tomorrow

vaṟōm

வருகிறோம்.

come are we]

O.K. Lady. We will come tomorrow. [Having gone we will come romorrow].

pakuti mūnru — Part three

பகுதி மூன்று

enna vēntum ? — What do you want?

என்ன வேண்டும் ?

kaṭaykkārar	eṉṉa	vēṇum ?	
கடைக்காரர்	என்ன	வேண்டும் ?	
	[what	want]	
	What (do you) want ?		
pālu	āppiḷ	eppaṭi ?	
பாலு	ஆப்பிள்	எப்படி ?	
	[apple	how]	
	How much is the apple ? [How (is) apple ?]		
kaṭaykkārar	ṭajaṉ	eṭṭu	rūpā.
கடைக்காரர்	டஜன்	எட்டு	ரூபாய்.
	[dozen	eight	rupees].
	Eight rupees (a) dozen.		
pālu	rompa	atikamāyirukkē !	
பாலு	ரொம்ப	அதிகமாக இருக்கிறதே !	
	[very	highly present is (it) Emph.]	
	Oh! (that) is very high.		

kaṭaykkārar	appaṭi-y-ellām[38]	ille.	nalla	
கடைக்காரர்	அப்படியெல்லாம்	இல்லை.	நல்ல	
	[like that-S-all	no	good	
	palam.			
	பழம்.			
	fruit]			
	Not at all. [Not like that]. (They are) good fruits.			
pālu	ēlu	rūpāyṉṉu	koṭuttā	
பாலு	ஏழு	ரூபாய் என்று	கொடுத்தால்	
	[seven	rupee Quot.	give if	
	vāṅkurēṉ.			
	வாங்குகிறேன்.			
	buy is I]			
	If (you) make it seven rupees (I) will buy some. [I will buy if (you) give as seven rupees].			
kaṭaykkārar	cari.			
கடைக்காரர்	சரி.			
	O.K.			

38. *appaṭiyellām* அப்படியெல்லாம் < [அப்படி-ய்-எல்லாம்] is an idiomatic expression meaning 'like that' 'in that manner'.

eppati irukkirīrkal ? How are you ?

எப்படி இருக்கிறீர்கள் ?

pālu	enna	kaṇṇan	car ?
பாலு	என்ன	கண்ணன்	சார்?
	[hello	Kannan	Sir]
	ippō	eppaṭiyirukkīṅka.	
	இப்பொழுது	எப்படி இருக்கிறீர்கள்?	
	now	how presant are you (Hon.)]	
	Hello Kannan Sir ! How are you now ?		
kaṇṇan	koñcam	paravāyille.	
கண்ணன்	கொஞ்சம்	பரவாயில்லை.	
	[little	not bad]	
	(Well), a little better.		
pālu	eḷuntiriccu	naṭantupāttīṅkaḷā[39]	
பாலு	எழுந்து	நடந்து பார்த்தீர்களா ?	
	[having got up	tried to walk you (Hon.) Int.]	
	Have you tried to get up and walk ?		

---

39. *naṭantupāttīṅkaḷā* < [*naṭantu* (V.P. of *naṭa* 'walk') *pā* (Trial Aux.) *-tt* (Pa.) - *īṅkaḷ* (P.T.) - *ā* (Int.)] நடந்து - பார்-த்த் ஈர்கள்-ஆ.

pāru பார் is used as an auxiliary verb to express 'trial' sense. It comes with the VP form of the concerned main

kaṇṇaṉ	ille	pālu !	naṭantā
கண்ணன்	இல்லை	பாலு !	நடந்தால்
	[no	Balu	walk if

valikkutu.

வலிக்கிறது.

pain is it]

No, Balu. If (I) walk it pains.

marupatiyum vantu parkkiren — I will come and see again

மறுபடியும் வந்து பார்க்கிறேன்

ṭākṭar	eṉṉa	cār ?	vali
மருத்துவர்	என்ன	சார் ?	வலி
	[hello	Sir	pain

koreñcirukkuatā ?[40]

குறைந்திருக்கிறதா?

have decreased it Int.]

Hello Sir ! Has the pain gone down ?

---

verb. *pāru* comes in the imperative and its alternent form *pā* comes elsewhere.

40. *koreñcirukkutā* < *koreñc* (V.P. of *kore* 'decrease' reduce') *iru* (Perf.) - *kk* (Pr.) *ut* (P.T. < *utu*) - *ā* (Int.)]
குறைந்த்-இரு-க்கிற் - அத் (< அது) - ஆ.

ravi	koñcam	koreñcirukku	cār.
இரவி	கொஞ்சம்	குறைந்திருக்கிறது	சார்.
	[little	have decreased(it) Sir]	
	It has gone down a little.		
ṭākṭar	vali	atikamānā[41]	colluṅka !
மருத்துவர்	வலி	அதிகமானால்	சொல்லுங்கள் !
	[pain	increase if	tell you
	innoru	ūci	pōṭurēn.
	இன்னொரு	ஊசி	போடுகிறேன்.
	another	injection	put is!]
	If the pain increases, please tell me. (I) will give (you) another injection.		
ravi	cari	cār.	
இரவி	சரி	சார்.	
	O.K.	Sir.	

---

41. *atikāmānā* < [*atikam* 'more, plenty'-*ānā* 'if became']. *ānā* is the conditional form of *āku* 'become'. *atikam* with *āna* gives the meaning 'if increases', 'if more', if high'. அதிகம் - ஆனால்.

pātam patinmūnru — Lesson Thirteen

பாடம் பதின்மூன்று

tiruviḷā — Festival

திருவிழா

Mariyamman festival is one of the important festivals of the Hindus. It is celebrated for two or three days. There will be different kinds of entertainments during the festival. Animals (hen/goat) are sacrificed to the Goddess, Mariyamman. On the last day there will be thimithi function.

pakuti onru — Part one

பகுதி ஒன்று

iḷaṅkōvaṉ	iṉṉekki	eṅka	teru(v)ile
இளங்கோவன்	இன்றைக்கு	எங்கள்	தெருவில்
	[today	our	street in
	māriyammaṉ[1]	tiruviḷā.	
	மாரியம்மன்	திருவிழா.	
	Mariyamman	festival]	

Today (there is) Mariyamman festival in our street.

---

1. *māriyammaṉ* மாரியம்மன் is the Goddess of rain. *māri* is 'rain'. This Goddess is worshipped far rain.

amman-ukku(p)	poṅkal	iṭuvōm[2].
அம்மனுக்கு(ப்)	பொங்கல்	இடுவோம்.
[Goddess to	ponkal	put will we]

We will offer ponkal to the Goddess.

rompa	vicēṣamā[3]	irukkum.
மிக	விசேஷமாக	இருக்கும்.
[very	specially	present will]

(It) will be very special.

vāṇavēṭikke,	karakam,[4]	cilampāṭṭam[5],
வாணவேடிக்கை,	கரகம்,	சிலம்பாட்டம்,
fireworks entei-tainment	karagm	chilampattam,

---

2. *poṅkal ituvōm* - cooking in front of the temple and offerin them to the Goddess. *poṅkal* பொங்கல் is a cooked item. *iṭu* இடு means 'put', but here it expresses the sense 'offer'.

3. *vicēṣamā* (Adv.) < [*vicēṣam* (N) - *ā* (Advr.)] விசேஷம்—ஆக. *vicēṣam* விசேஷம் 'special, important'.

4. *karakam* கரகம் is a kind of folk dance. The dancers dance, keeping a decorated pot on their head, according to the tune of a drum play.

5. *cilampāṭṭam* < [*cilampu* 'stick' - *āṭṭam* 'play'] சிலம்பு—ஆட்டம். Two or more persons will be involved in this play. It involves fighting with sticks.

nayyaṇṭi	mēḷam[6]	ellām
நையாண்டி	மேளம்	எல்லாம்
nayyandi	melam	all
iṉṉekki	rāttiri	uṇṭu.[7]
இன்றைக்கு	இரவு	உண்டு.
today	night	present.]

Today night there will be fireworks entertainment, karakam, cilampattam and nayyandi melam.

ēkappaṭṭa[8]	kūṭṭam	ite(p)
ஏகப்பட்ட	கூட்டம்	இதை(ப்)
[large	crowd	it Acc.
pākka	varum.	
பார்க்க	வரும்	
see to	come will.]	

---

6. *nayyāṇṭi mēḷam*; *nayyāṇṭi* நையாண்டி 'mockery' *mēḷam* மேளம் 'drum play'. It is a mockery drum play. In general it is played with karagam dance. It is also played independently.

7. *uṇṭu* உண்டு is a defective verb used to express the existence.

8. *ēkappaṭṭa* ஏகப்பட்ட 'large', 'plenty'. It is used to exaggerate the quantity.

There will be a large crowed to witness this

[A large crowed will come te see this.]

eṅka	vīṭṭile	ellārum
எங்கள்	வீட்டில்	எல்லோரும்
[our	home at	all
ippo	kōyilukku(t)tāṉ	
இப்போது	கோயிலுக்கு(த்)தான்	
now	temple for Emph.	

poṟappaṭṭu(k)kiṭṭu irukkōm.

புறப்பட்டு(க்)கொண்டு இருக்கிறோம்.

starting are we]

Now all at home are setting out for the temple.

pakuti iraṇṭu **Part two**

பகுதி இரண்டு

karakam **Kargam**

கரகம்

maṇi	appā !	pāruṅka !	oru	akkā[9]
மணி	அப்பா!	பாருங்கள்!	ஒரு	அக்காள்
	[father	look Hon.	one	lady

---

9. *akkā* அக்காள் a kinship term meaning 'elder sister'. This is also used to address any lady who is elder to the speaker.

	taleyile	pū(k)koṭatte[10]	vaccu(k)kiṭṭu[11]
	தலையில்	பூ(க்)குடத்தை	வைத்து(க்)கொண்டு
	on head	flower pot Acc.	having kept
	āṭu-ṟā!		
	ஆடு-கிறாள்!		
	dance-is she]		

Father ! Look ! A lady is dancing with a flower pot balanced on her head.

[A lady is dancing keeping a flower pot on her head].

iḷaṅkōvaṉ	maṇi !	atāṇṭā[12]	karakam
இளங்கோவன்	மணி !	அது தாண்டா	கரகம்
	[Mani	that Emph. boy	karagam
	āṭuṟatu[13]	eṅkiṟatu.	
	ஆடுதல்	என்பது.	
	dancing	is called.]	

10. *pūkkoṭatte* < [*pū* 'flower' - *k*(S) - *koṭam* 'pot' - *e* (Acc.)] (c. f. 2.11).
11. *vaccuk kiṭṭu* < [*vaccu* (V.P) - *k* (S) - *kiṭṭu* (Aux.)]. -*kiṭṭu* கொண்டு is used to express simultaneous as well as continuous action. *koṇṭu* கொண்டு is added to the first action (i.e. to the first verb) which is in the V.P form.
12. *atāṇṭā* < [*at* (<*atu*) - *tāṉ-ṭā* (Mas. c. f. 1.57)] அது-தாண்டா. The alveolar nasal *ṉ* ன் is changed into retroflex *ṇ* ண் when followed by the retroflex plosive *ṭ* ட். (*ṉ* ன் > *ṇ* ண் / - *ṭ* ட்).
13. *āṭuṟatu* (V. N.) < [*āṭu* (V. St) - *ṟ* (Pr.) - *atu* (V. N. Suf.)] (c.f. 6.6.).

Mani ! that is called Karaçam Dancing.

kōpāl	appā !	anta	ammā	nayyāṇṭi
கோபால்	அப்பா !	அந்த	அம்மா	நையாண்டி
	[father	that	lady	nayyandi

mēḷattukku(t)	takuntāppōla[14]	nallā
மேளத்திற்கு(த்)	தகுந்தாற்போல	நன்றாக
melam to	according	nicely

āṭutu-ppā ![15]

ஆடுகிறாள் !

dances she father]

Father ! That lady is dancing well to the tune of the nayyandi melam.

[That lady is dancing well according to the nayyandi melam].

In L. T. the V. N. is also derived by adding certain suffixes to the verb stem. In ஆடுதல், the suffix added is தல். [ஆடு (V. St.) - தல்.]

14. *takuntāppōla* தகுந்தாற்போல 'in a fitting manner'.

15. *āṭutu* < [*āṭ* (V. St. < *āṭu*)- ø (Pr.)-*utu* (Neu.P.T.)]. In S.T. the feminine is also referred with neuter Pronoun and is given the neuter P. T. But it is not so in the L.T. Here the feminine form alone is used. ஆடுகிறாள் <[ஆடு-கிற்-ஆள்].

appā is deleted in the L. T. construction.

kamalā	nāyyāṇṭi	mēḷam	yārunka ?[16]
கமலா	நையாண்டி	மேளம்	யாருங்க ?
	[nayyandi	melam	who-Hon.]
	Who is (performing) the nayyandi melam ?		
iḷaṅkōvṉ	pirapala	cōmacuntaram	kuḷuviṉartāṉ[17].
இளங்கோவன்	பிரபல	சோமசுந்தரம்	குழுவினர்தான்.
	[famous	Somasundaram	group people Emph.]
	It is the famous Somasundaram party.		
	[The famous Somosundaram group.]		
kamalā	atāṉe(p) pāttēṉ[18]!	rompa	nallā
கமலா	அதுதானே பார்த்தேன் !	மிக	நன்றாக
	[that is what I wonder	well	very

---

16. *yārunka* யாருங்க < [*yāru* யாரு 'who' - *ṅka* ங்க (Hon.)] It enquries the persons who are playing *nayyāṇṭi mēḷam* and it is not questioning the *nayyāṇṭi mēḷam.* Similarly *piyāṉō yārunka*? 'Who is playing piano ?' In conversational Tamil constructions of this Type (cultural events) avoid the verb which stands to express ''perform''.

17. *kuḷu* குழு 'group', 'troop', party'; *kuḷuviṉar* குழுவினர் 'peple of group or party or troop'.

18. *atāṉep pāttēṉ* அது தானே பார்த்தேன். an idiomatic expression meaning 'that is what I am wondering'.

mēḷam vācikkiṟāṅka.[19]

மேளம் வாசிக்கிறார்கள்.

drum play play-they]

Oh ! that is what I am wondering !

They are playing very well.

cilampāṭṭam **Chilampattam**

சிலம்பாட்டம்

maṇi	appā !	ateṉṉappā?[20]	reṇṭu
மணி	அப்பா !	அது என்னப்பா ?	இரண்டு
	[father	that what father	two
	māmā[21]	kampāle[22]	caṇṭe
	மாமாக்கள்	கம்பால்	சண்டை
	men	stick by	quarrel-

---

19. *vāci* வாசி means 'read'. But it also means 'play' in connection with the musical instruments.

20. *ateṉṉappā* < [*atu* - *eṉṉa* - *appā*].

21. *māmā* மாமா is also used to address or refer elders by the children.c.f. 5.1

மாமா - க்கள். - க்கள் occurs as the plural suffix after the nouns ending with long vowels, after disyllabic words where both the vowels are short and the final one is உ and in other places - கள் occurs.

22. *kampāle* < [*kampu* - *āle*]

pōṭurāṅka?[23]

போடுகிறார்கள்?

they]

Father! What (is) that? Two men are fighting (each other) with sticks.

kōpāl	ṭēy	maṇi !	atāṇṭā
கோபால்	டேய்	மணி !	அதுதாண்டா
	[hey	Mani	that Emph. hey

cilampāṭṭam'ṅkiratu.

சிலம்பாட்டம் என்பது.

chilampattam is called.]

Hey Mani ! that is called chilampattam.

Iaṅkōvaṉ	āmā	maṇi !	itu	oru	vīra
இளங்கோவன்	ஆமாம்	மணி !	இது	ஒரு	வீர
	[yes	Mani	this	one	heroic

veḷeyāṭṭu.	aṅke	pāru !	eppaṭi
விளையாட்டு.	அங்கே	பார் !	எப்படி
play	there	look	how

கம்பு - ஆல்

- *āle* - ஆல் is the instrumental case suffix expressing the sense 'by' 'with'.

23. *caṇṭe pōṭu* சண்டை போடு (V) 'quarrel' 'fight'.
caṇṭe சண்டை (N) 'quarrel' 'fighting'.

reṇṭu	pēru	kampe	colaṭṭi
இரண்டு	பேர்	கம்பை(ச்)	சுழற்றி(ச்)
two	person	stick Acc.	having flourished

colaṭṭi[24]	aṭi-kkiṟāṅka.
சுழற்றி	அடி-க்கிறார்கள்.
having flourished	beat-they]

It is true, Mani! [yes Mani!] This (is) an heroic play. Look there! how the two people are flourishing sticks and striking (each other). [Look there! How the two persons strike having flourished and flourished the sticks].

kamalā	eṉṉaṅka !	oru	āḷu[25]
கமலா	என்னாங்க !	ஒரு	ஆள்
	[what dear	one	person

---

24. *colaṭṭi* சுழற்றி is the V.P. form of *colaṭṭu* சுழற்று 'flourish'. The V.Ps are repeated to express repetitive sense.

25. *āḷu* ஆள் 'person' generally refers to a male person. But it can also be used to refer to a 'person' in general (male or female).

	katti(y)e	vīcu-ṟāru.	
	கத்தியை	வீசு-கிறார்.	
	knife - Acc.	brandishes-he (Hon.)	
	iṉṉoruttar[26]	kampāle(y)e	
	இன்னொருவர்	கம்பாலேயே	
	another person	stick with Emph.	
	ate	taṭu-kkuṟāru.	
	அதை(த்)	தடு-க்கிறார்.	
	that Acc.	blocks-he (Hon.)]	
	What (is it), Dear ! One person is brandishing a knife (and) another person is blocking it with a stick.		
iḷaṅkōvaṉ	āmā	kamalā !	iṉṉum
இளங்கோவன்	ஆமாம்	கமலா !	இன்னும்
	[yes	Kamala	further

26 *iṉṉoruttar* இன்னொருவர் 'another person (Hon.) *iṉṉoruttaṉ* இன்னொருவன் 'another person' (Mas. Non-Hon.), *iṉṉorutti* இன்னொருத்தி 'another person' (Fem. Non-Hon.). *oruttar* ஒருவர் 'one person' (Hon.), *oruttaṉ* ஒருவன் 'one person' (Mas.), *orutti* ஒருத்தி 'one person' (Fem.).

ennennellāmō[27]	avaṅka	ceyvāṅka.
என்னென்னவோ	அவர்கள்	செய்வார்கள்.
so many things	they	will do they]

Yes Kamala ! They will do many other things also.

[.... do further so many things.]

poykkāl kutirai **False legged horse**

பொய்க்கால் குதிரை

maṇi	ammā!	atō	pāru.
மணி	அம்மா !	அதோ	பார்.
	[mother	there	look.
	reṇṭu	pēru	kutirayile
	இரண்டு	பேர்	குதிரையில்
	two	person	horse on

---

27. *eṉṉeṉṉellāmō* < [*eṉṉa* 'what' -*eṉṉa* 'what' *ellām* 'all' -*ō* (Indef. Part.)].

என்னென்னவோ < [என்ன-என்ன-வ் (S) - ஓ]. When the interrogatives come together, the final *a* அ of the first interrogative is dropped.

The double interrogative *eṉṉeṉṉa* expresses plurality and are used to enquire the different kinds of actions / events

āṭiṭṭu vāṟāṅka[28].

ஆடிக்கொண்டு வருகிறார்கள்.

come dancing-they.]

Mother! Look there. Two persons come dancing on a horse.

kamalā	maṇi !	atu	uṇmayāṉā[29]	kutire
கமலா	மணி !	அது	உண்மையான	குதிரை
	[Mani!	it	real	horse
	illeṭā!			
	இல்லையடா!			
	no boy			

---

etc. So eṉṉeṉṉa ceyrāṅka 'What are the activities (events/ actions etc.) they do ?' With this interrogative *ellām* is added to give more sense to the plurality. So *eṉṉeṉṉ-ellām irukku* means 'What are the different kinds of things present'? This sense can also be expressed by *eṉṉellām irukku*. The addition of one more *eṉṉa* gives some more information. When particle *-ō* ஓ which is used to express indefiniteness is added to interrogative, the interragative looses the interrogative quality and as an idiomatic expression it means 'different kinds of .... 'or' so many things / events'.

28. The V.P. contruction can either express simultaneous action or consequtive action. Here it expresses the simultaneous action *i.e.* the action of dancing and coming take place together.

29. *uṇmayāṉa* உண்மையான (Adj.) < [*uṇmay* உண்மை (N. 'truth') *-āṉa* ஆன (Adjr.]

	poy(k)kāl	kutire![30]	
	பொய்க்(க்)கால்	குதிரை !	
	false leg	horse]	

Mani ! It (is) not real harse. (It is a) false legged horse.

kōpal	eppaṭippā	avaṅka	tatrūpamā[31]
கோபால்	எப்படியப்பா	அவர்கள்	இயற்கையாக
	how father	they	realistically
	āṭuṟaṅka ?		
	ஆடுகிறார்கள் ?		
	dance they]		

Father, how they dance realististically ?

ilaṅkōvaṉ	atāṉṭā	palakkam.	anta
இளங்கோவன்	அதுதாண்டா	பழக்கம்.	அந்த
	[that only boy	practice	that

---

30. *poykkāl kutire* is a model of horse made out of wood. It has no legs. At the middle of the body there will be an opening. The dancers will keep it at the middle of thei body and it will look like sitting on the horse. The dancers also tie small wooden logs with their legs and dance with it. *poy* பொய் 'false' 'lie'.

31. *tatrūpamā* (Adv.) < [*tātrūpam* 'real, natural' (N)-*ā* (Advr.] இயற்கையாக < [இயற்கை - ஆக].

reṇṭu pērum[32] kālile[33]

இரண்டு பேரும் கால்களில்

two person leg in

katte(y)e(k)[34] katti(k)kiṭṭu āṭurāṅka.

கட்டையை(க்) கட்டிக்கொண்டு ஆடுகிறார்கள்.

small log Acc, having tied themselves dance are they.]

Hey, that is (due to) practice. Those two people are dancing with logs tied on their legs. [.... dancing having logs tied...]

maṇi rompa nallā irukkuppā !

மணி மிக நன்றாக இருக்கிறது அப்பா !

[very nicely present is (it) father].

Father it is very nice !

---

32. *pērum* < [*pēr* 'person' *-um* (Incl. Part.]

-um உம் is added after *pēr* பேர் to express the involvement of all the persons denoted by the preceding numeral. When *pērum* பேரும் comes after an interrogative it expresses the indefiniteness of the number of persons.

ettaṉe pērum varalām எத்தனை பேரும் வரலாம் } Any number of persons can come.

33. *kālilē*, here *kāl* 'leg' is in the singular whereas in the L.T. it is expressed in the plural. கால்கள்-இல்

34. கட்டையை < [கட்டை-ய் (S) - ஐ (Acc.)]

kōpāl appā atō vāṇavēṭikke !

கோபால் அப்பா அதோ வாணவேடிக்கை !

[father there fireworks entertainment

aṅke pōkalam.

அங்கே போகலாம்.

there can go].

Father ! There (is) fireworks show. We can go there.

vāṇa vēṭikkai **Fireworks entertainment**

வாண வேடிக்கை

kōpāl maṇi ! vāṉattile[35] pāru-ṭā !

கோபால் மணி ! வானத்தில் பாருடா !

[Mani sky in look-hey

kalar(k) kalarā[36] vāṇam

வண்ணம் வண்ணமாக வாணம்

colour colourfully fireworks

35, *vaṉattile* < *vaṉam* 'sky' - *ile* (Loc.)] வாணம்-இல்

36. *kālarā* < [*kalar*(N) - *ā* (Advr.]வண்ணம்-ஆக

The adverbs are repeated to give multiplicity and also varieties. When the derived adverbs are repeated the first one will be in the nominal term from which they are derived by adding the adverbializer - *ā* -ஆக.

veṭi-kkutu.

வெடி-க்கிறது.

burst-is it]

Hey Mani! Look at the sky! The crackers are bursting in different colours.

maṇi	pūpūvā[37]	viri-ñcu	viḻutu.
மணி	பூ பூவாக	விரி-ந்து	விழுகிறது.
	[flower as flower	having blossomed	fall(is) it]

It spreads like a blossom and falls.

kamalā	rompa	aḻakā	irukku-ṅka.
கமலா	மிக	அழகாக	இருக்கிறது-ங்க.
	[very	beautifully	present is (it) Hon.
	eppaṭi-ṅka	ite(y)ellām	ceyṟāṅka.
	எப்படி-ங்க	இதையெல்லாம்	செய்கிறார்கள்.
	how-Hon.	it Acc. all	do they]

It is very beautiful. How they do these things.

---

37. *pūpūvā* < [*pū*(N) - *pū* (N) - *v*(S) -*ā* (Advr.)]
பூ-வ் - ஆக.

38. *aḻakā* (Adv.) - < [*aḻaku* (N) - *ā* (Advr.)
அழகு - ஆக.

iḷaṅkōvaṉ	atukkiṉṉu	cele	pēru
இளங்கோவன்	அதற்கென்று	சில	பேர்
	[for that purpose	some	person
	irukkāṅka.	avaṅka	parampare(p)
	இருக்கிறார்கள்.	அவர்கள்	பரம்பரை
	present are they	they	tradition
	parampare(y)ā[38]	ite	ceñcukiṭṭu varāṅka[40].
	பரம்பரையாக	இதை(ச்)	செய்து கொண்டு வருகிறார்கள்.
	traditionally	this Acc.	have been doing they]

There are a few people whose job it is. [There .... people for that purpose.] They have been doing it traditionally.

kōpāl	maṇi !	aṅke	pāruṭā !
கோபால்	மணி !	அங்கே	பாருடா !
	[Mani	there	look hey

---

39. *parampare* 'tradition, heredity'. *paramparey* (S)- *ā* (Advr.) c. f. 13.36.
பரம்பரை - ய் - ஆக.

40. The progressive sense can also be expressed by tha VP form of concerned verb added with *kiṭṭu* கொண்டு and followed by the verbal form of *vā* வா. Here the action or event takes place for a longer period.
ceñcu செய்து is the V.P. form of *cey* செய் 'do.'

	evvaḷavu	oyarattile[41]	pōy
	எவ்வளவு	உயரத்தில்	போய்
	how much	high in	having gone
	anta	vāṇam	veṭikkutu.
	அந்த	வாணம்	வெடிக்கிறது.
	that	cracker	bursts it].

Hey Mani ! Look there ! How high the cracker bursts.

[How much hight that cracker has gone and burst.]

iḷaṅkōvaṉ	cari !	vāṅka !	ammaṉe(k)
இளங்கோவன்	சரி !	வாருங்கள் !	அம்மனைக்
	O.K.	come	Goddess Acc.
	kumpiṭṭiṭṭu(p)		pōkalām.
	கும்பிட்டு விட்டு(ப்)		போகலாம்.
	having worshipped		can go]

O.K. Please come. (We) can worship the Goddess and go.

kumpiṭutal **Worshiping**

கும்பிடுதல்

---

41. *oyarattila* < [*oyaram* 'high'៖- *ile* (Loc.)] உயரம் -இல்.

maṇi	ammā	atō	pāruṅka !
மணி	அம்மா	அதோ	பாருங்கள் !
	[mother	there	look Hon.
	varice(y)ā[42]	ellārum	poṅka(p)[43]
	வரிசையாக	எல்லோரும்	பொங்கல்
	row	all	pongal
	pāṉe(y)e	vaccirukkāṅka.	
	பானைகளை	வைத்திருக்கிறார்கள்.	
	pot(s) Acc.	have kept they]	
	Mother ! Look there ! They have kept the pongal pot as row.		
kamalā	āmā-ṭā	iṉṉum	koñca
கமலா	ஆமாண்டா	இன்னும்	கொஞ்ச
	[yes boy	further	a little
	nērattile	ammaṉukku(p)	pūja
	நேரத்தில்	அம்மனுக்கு(ப்)	பூசை
	time in	Goddess to	puja

---

42. *variceyā* (Adv.) <[*varice* (N) *-ā* (Advr.)] வரிசை - ஆக.

43. *poṅka* (<*poṅkal*) 'cooked items' which are prepared to offer to the Goddess. *poṅkappāne* is a compound noun (*poṅkal pāṉe*). In the ST. *l* of *poṅkal* is dropped and *p* of *pāṉe* is doubled, since it follows the noun which has vowel ending.

naṭakkum.

நடக்கும்.

will take place].

Yes son ! In a short time a puja will be performed to the Goddess. [...puja will take place for the Goddess.]

kōpāl	appā !	atō	nikkiṟa
கோபால்	அப்பா !	அதோ	நிற்கிற
	[father	there	which stand
	āṭu-ṅka	ellām	ammaṉukku(p)
	ஆடு-கள்	எல்லாம்	அம்மனுக்கு(ப்)
	goats	all	Goddess to
	pali	koṭukka(t) tāṉ-ē	appā !
	பலி	கொடுக்க(த்)தானே	அப்பா !
	sacrifice	to give Emph. Int.	father]

Father ! Are the goats standing there meant as a sacrifice for the Goddess ?

[... meant to give sacrifice to the Goddess?].

iḷaṅkōvaṉ	āmā	kōpāl.
இளங்கோவன்	ஆமாம்	கோபால்.
	Yes	Gopal.

kamala	maṇi !	itō,	ammaṉukku(t)
கமலா	மணி !	இதோ,	அம்மனுக்கு(த்)
	[Mani	here	Goddess to

tīpārttaṉe	kāṭṭuraṅka.	kumpitu.
தீபாராதனை	காட்டுகிறார்கள்.	கும்பிடு.
thiparthane	show they	worship].

Mani! They are showing thiparthane to the Goddess Please worship.

pakuti mūnṟu **Part three**

பகுதி மூன்று

atō pārunkaḷ **please look there**

அதோ பாருங்கள்

palaṉi	appā !	atō	pāruṅka,
பழனி	அப்பா !	அதோ	பாருங்கள்,
	[father	there	look Hon.
	oruttar	pāṉe	mēle
	ஒருத்தர்	பானை	மேலே
	one person	pot	on
	ville[44]	vaccu(k)iṭṭu	
	வில்லை	வைத்து(க்)கொண்டு	
	bow-Acc.	having kept.	

44. *ville* < [*villu* 'bow' - *e* Acc.] வில் 'bow'

aṭikkiṟāru.

அடிக்கிறார்.

beats-he (Hon.)]

Father ! Please look there ! One person has kept a bow across the pot and is beating it. [One person beats a bow having kept it on a pot]

appā	atāṇṭā	villuppāṭṭuṅkiṟatu[45].
அப்பா	அதுதாண்டா	வில்லுப்பாட்டு என்பது.
	[that Emph. hey	villuppattu is called]

Hey, that is called villuppattu.

palaṉi	avaru	pāṭa(p)pāṭa,[46]	avarukūṭa
பழனி	அவர்	பாட(ப்)பாட,	அவர்கூட(ச்)
	[he(Hon.)	as go on singing	him with

---

45. *villuppāṭṭu* is a chorus folk song. A bow is used as the main musical instrument and hence this name.

46. *pāṭa(p)pāṭa* பாட(ப்)பாட < [*pāṭa* பாட (Inf.) *pāṭa* பாட (inf)]. Infinitives when repeated express the repetition of the action event etc.

cēntavaṅkaḷum[47]	pāṭuṟāṅka.
சேர்ந்தவர்களும்	பாடுகிறார்கள்.
those who belong to also	sing-they]

As he goes on singing, his entire party is also singing. [While he sings those who belong to him are also singing.]

appā	āmāṇṭā.	atutāṉ	villuppāṭṭ-ōṭa
அப்பா	ஆமாண்டா.	அதுதான்	வில்லுப்பாட்டுடைய
	[yes boy	that Emph.	villuppattu's

ciṟappau.

சிறப்பு.

speciality]

Yes son. That is the special feature of the villuppattu. [That is villuppattu's speciality].

---

47. *avarukūṭa cēntavaṅka* அவர்கூடச் சேர்ந்தவர்கள் < 'those who belongs to him' 'his followers' 'his group' etc. *cēntavaṅkaḷum* < [*cēntavaṅkaḷ* < people belongs to '*-um*' (Incl. Part.)]. *cēntavaṅka(ḷ)* சேர்ந்தவர்கள் is the plural form. The singular is *cēntavaṉ* 'one who (Mas.) belongs to' *cēntavā(ḷ)* 'one who (Fem.) belongs to'.

eppati natakkirārkal? How they are walking?

எப்படி நடக்கிறார்கள்?

pālu	ammā!	atennemmā[48]	cele	
பாலு	அம்மா!	அது என்னம்மா	சில	
	[mother	that what mother	certain	
	pēru	tī(y)ile[49]	natantu	pōrāṅka?
	பேர்	தீயில்	நடந்து	போகிறார்கள்?
	person	fire in	having walked	go they]

Mother! What is it, a few people goes on walking on the fire.

ammā	atutān	tīmiti[50]	enkiratu.
அம்மா	அதுதான்	தீமிதி	என்பது.
	[that only	thimithi	is called
	amman	tiruvilā(v)ile	ippaṭi
	அம்மன்	திருவிழாவில்	இப்படி
	Goddess	festival in	in this way

---

48. *atennemmā* < [*atu-enna -ammā*]

49. தீயில் < [தீ-ய் (S) -இல்]

50. *tīmiti* 'stamping on the fire' 'walking on the fire'. *tī* 'fire'

naṭappāṅka.

நடப்பார்கள்.

walk will they]

That is called thimithi. They walk like this in the Amman festival.

pālu	eppaṭimmā	avaṅka	naṭakkiṟāṅka?
பாலு	எப்படியம்மா	அவர்கள்	நடக்கிறார்கள் ?
	[how mother	they	walk they]

Mother, how can they walk like that? [........ how are they walking?]

ammā	atutāṉ	ammaṉ	aruḷu.
அம்மா	அதுதான்	அம்மன்	அருள்.
	[that Emph.	Goddess	grace]

That is Amman's grace.

pali — Sacrifice

பலி

rāmaṉ	appā !	kōyil	muṉṉāle
இராமன்	அப்பா !	கோயில்	முன்னால்
	[father	temple	in front

---

mi:i 'stamp'. On the ground small wooden logs are spread They are set on fire and when they are red hot the flames are put out. After that people walk on the glowing embers.

kōḻi-ṅka nikkutē-[51]ppā!

கோழி-கள் நிற்கின்றனவேயப்பா!

hens stand they Emph. father

etukku ?

எதற்கு ?

which for]

Father! Why the hens are standing in front o temple? [Hens are standing in front of the temple. For which (purpose) ?]

appā	ammaṉukku	pali	koṭukka.
அப்பா	அம்மனுக்கு(ப்)	பலி	கொடுக்க.
	[Goddess to	sacrifice	to give]
	(They are) for sacrificing to Amman.		
rāmaṉ	ēmppā	pali	iṭuṟāṅka ?
இராமன்	ஏனப்பா	பலி	இடுகிறார்கள் ?
	[why father	sacrifice	put they]
	Father why are they making sacrifices ?		

---

51. *nikkutē* < [ṉi (V. St. < *nil*) -*kk* (Pr.) -*ut* (PT < *utu*) *ē* (Emph.)]

நிற்கின்றனவே < [நில் - கின்ற் - அன - வ் (S) - ஏ]
ல் becomes ற் when followed by a plosive.

52. *ēmppā* < [*ēṉ-appā*]

appā	atu	nēttikkaṭan	tāmpā ![53]
அப்பா	அது	நேர்த்திக்கடன்	தாம்பா !
	[that	vow to the deity	only boy]

That (is) only (due to) vow to the deity.

---

53. *tāmpā* < [*tān* - *appā*]. Here *appa* gives the sense 'boy' or 'son'. Youngesters are addressed with 'appa' out of affection and to show intimacy.

paṭam patināṉku — Lesson Fourteen

பாடம் பதினான்கு

tirumaṇam niccayittal

திருமணம் நிச்சயித்தல் — Fixing the marriage

Ilankovan is arranging for the marriage for his daughter Mathavi. So a bridegroom party visits Ilankovan's house to see Mathavi, the bride. (Usually the bridegroom meets the bride at her house before the marriage is arranged in order to make sure that they will be a suitable couple.) The bridegroom is satisfied with Mathavi and Mathavi is also satisfied with the bridegroom. So both the parties agree on the marriage and exchange betal nut (*vettile pākku*) as a token of their contract. Before fixing the marriage both the parties discuss the dowry. It is the general custom for the bride's family to give a dowry to the groom. The dowry varies according to education, profession etc.) Then the bridegroom party leaves the house after taking coffe.

pakuti oṉṟu — Part One

பகுதி ஒன்று

ilaṅkōvaṉ	eṉ make	mātavikku(u)	tirumaṇam
இளங்கோவன்	என் மகள்	மாதவிக்கு(த்)	திருமணம்
	[my daughter	Mathavi to	marriage

ceyya	ērpāṭu	paṇṇi(k)kiṭṭirukkēṉ[1].
செய்ய	ஏற்பாடு	செய்துகொண்டிருக்கிறேன்.
to do	arrangement	is making -I]

I am making arrangements for the marriage of my daughter Mathavi. [.... arrangements to do marriage for my daughter]

iṉṉekki	avaḷe	oru
இன்றைக்கு	அவளை	ஒரு
[today	she Acc.	one
māppiḷe	vīṭṭileyiruntu[2]	poṇṇu
மாப்பிள்ளை	வீட்டிலிருந்து	பெண்
bridegroom	house from	bride
pākka[3]	vaṟāṅka.	
பார்க்க	வருகிறார்கள்.	
to see	come they]	

Today a bridegroom's family is coming to see her.

---

1. *paṇṇikkiṭṭirukkēṉ* < [*paṇṇu* (V.P. of *paṇṇu* 'do') -*k* (*S*) - *kiṭṭiru* (Prog. Aux.)-*kk*. *ēṉ* (Pr.)-*ēṉ*. PT)]. செய்து (V.P.) - கொண்டிரு (Aux) -க்கிற்- (Pr.)—ஏன் (P.T.)
2. *vīṭṭileyiruntu* < [*vīṭu* 'house' -*ileyiruntu* (Abl)]. Here *vīṭu* stands for the family வீடு இலிருந்து
3. *poṇṇu pākka* பெண் பார்க்க 'to see the bride' - i.e., to assess the suitability of the girl. (*poṇṇu* 'bride/girl/woman/female')

ippō cāyaṅkālam maṇi nālu.

இப்பொழுது சாயங்காலம் மணி நான்கு.

[now evening time four]

Now (it is) 4°' clock (in) the evening. [Now the time (is) evening 4°' clock.]

innum konca nērattile[4] māppiḷe

இன்னும் சிறிது நேரத்தில் மாப்பிள்ளை

[further a little in time bridegroom

vīṭṭukkāraṅka[5] vantuṭuvāṅka[6].

வீட்டுக்காரர்கள் வந்துவிடுவார்கள்.

family members will come they]

The bridegroom party will come within a short time [The bridegroom family members will come in a little more time].

---

4. *innum konca nēram* இன்னும் கொஞ்ச நேரம் 'a little more time' 'futher a little time'

5. *vīṭṭukkāraṅka* வீட்டுக்காரர்கள் 'the members of the house/family'

vīṭṭu (< vīṭu) -(k) kāraṅka
வீட்டு (< வீடு) -(க்) காரர்கள் (c.f. 3.31.)
-kāraṅka - காரர்கள் is the plural suffix of *kāraṉ* -காரன் (Mas. Suf.) *-kāri* -காரி (Fem. Suf.) (c.f. 3.31.)

6. *vantuṭuvāṅka* < [*vantu*(V.P.) -*ṭu* (Defi. Aux.) -*v* (Fu.) -*āṅka* (PT)] வந்து-விடு-வ்-ஆர்கள்.

kamalā ellā ēṟpāṭum

கமலா எல்லா ஏற்பாடுகளையும்

[Kamala all arrangements

paṇṇiṭṭa[7].

செய்து விட்டாள்.

have made she]

Kamala has arranged every thing.
[Kamala has made all arrangements].

mātavi(y)um tayār āyāccu[8].

மாதவியும் தயார் ஆகிவிட்டாள்.

[Mathavi also ready has become she]

Mathavi has also got ready.

[Mathavi also has become ready].

itō, kār cattam kēkkutu.

இதோ, கார் சத்தம் கேட்கிறது.

[here car sound hear-it]

Here, the car is heard. [Here, hears the car sound].

---

7. *ēṟpāṭum* < [*ēṟpāṭu* 'arrangement' -*um* (Part.)] ஏற்பாடு—உம். *paṇṇiṭṭā* <[*paṇṇi* (V.P.) -*ṭ* (Defi.)—*ṭ*(Pa.) -*ā*(P.T.)] பண்ணி-விட்-ட்-ஆள்

8. *āyāccu* < [*āy* (V.P. of *āku* 'become') -*āccu* (Compl. Aux.)] ஆகிவிட்டாள் <[ஆகி (V.P. of ஆகு) -விட் (Defi.) -ட்(Pa.) ஆள் (P.T.)].

māppiḷe	vīṭṭukkārankaḷā(t)tāṉ[9]
மாப்பிள்ளை	வீட்டுக்காரர்களாக(த்)தான்
[bride	family members Emph.

irukkaṇum.

இருக்கவேண்டும்.

must be]

It must be the bridegroom party.

pakuti iranṭu — Part Two

பகுதி இரண்டு

varavērral — Welcoming

வரவேற்றல்

iḷankōvaṉ	vānka,	vānka,	vaṇakkam.
இளங்கோவன்	வாருங்கள்,	வாருங்கள்,	வணக்கம்.
	[come Hon.	come Hon.	good morning]
	Good morning. Please come (in).		
viṉāyakam	vaṇakkam.		
வினாயகம்	வணக்கம்.		
	Good morning.		

In LT the definitive auxiliary விட் is used whereas in ST *accu* is used. Instead of *accu, iṭṭā* which is the ST form of விட்டாள் can also be used. *āyiṭṭā* ஆகிவிட்டாள்

9. *vīṭṭukkārankaḷ-āttāṉ* வீட்டுக்காரர்கள் -ஆகத்தான்

kamalā	vāṅka.		
கமலா	வாருங்கள்.		
	Please come.		
iḷaṅkōvaṉ	ukkāruṅka.	taṇṇi	vēṇuṅkaḷ-ā ?[10]
இளங்கோவன்	உட்காருங்கள்.	தண்ணீர்	வேண்டுமா ?
	[sit down Hon.	water	need Hon.] Int.
	Please sit down Do (you) want (some) water?		
viṉāyakam	āmā.	koñcam	koṭuṅka.
வினாயகம்	ஆமாம்.	கொஞ்சம்	கொடுங்கள்.
	[yes	a little	give Hon]
	Yes. Please give (me) a little.		
kamalā	intāṅka.		
கமலா	இந்தாருங்கள்.		
	Here you are.		

āttāṉ ஆகத்தான் < [*ā* ஆ (Adv.) -*t* த் (S) -*tāṉ* தான் (Emph.)].
c. f, 14. 12

10. *vēṇuṅkaḷā* < [*vēṇum* - *ṅkaḷ* (Hon.)-*ā* (Int.)]. *m* in *vēṇum* is dropped. வேண்டும்-ஆ. Generally the honorific suffix is not used with the defecthive verb வேண்டும்.

It is a social custom among the Tamils to offer water to the guests as soon as they come.

viṉayakam	itutāṅka[11]		namma	payyaṉ.
விநாயகம்	இவன்தாங்க		நம்	பையன்
	[this Emph. Hon.		our	son
	pēru	pālaṉ.	matura(y)ile	
	பெயர்	பாலன்.	மதுரையில்	
	name	Balan	Madurai in	
	pērāciriyar-ā[12]	vēle	pākkiṟāṉ.	
	பேராசிரியராக	வேலை	பார்க்கிறான்.	
	professor as	work	does he]	
	He (is) our son. (His) name (is) Balan.			
	He is working as a Professor in Madurai.			
iḷaṅkōvaṉ	vaṇakkam.			
இளங்கோவன்	வணக்கம்.			
	Good Morning.			

---

11. *itutāṅka* < [*itu-tāṉ-ṅkā*].
Here the honorific expression goes to the hearer i e., the hearer is honored and not to the person who is introduced. The honorific foım is used often when one speaks to a person to whon one wish to give respect.
When someone is introduced to another person, instead of the pronouns *ivaṉ* 'this he' *ivaḷ* 'this she', the neuter pronoun *itu* 'this it' is also used in the ST. So *itu eṉ makaṉ* means 'He/This is my son'.

12. *pērāciriyar-ā*. The Adv.suffix-*ā* ஆக comes with the nouns to express manner sense and expresses the meaning 'as'.
பேராசிரியர்-ஆக

pālan vaṇakkam.

பாலன் வணக்கம்.

Good morning.

vinaāyakam itu en meneyvi kōmati.

வினாயகம் இது என் மனைவி கோமதி.

[this it my wife Gomathi]

She is my wife Gomathi.

iḷaṅkōvan vaṇakkam.

இளங்கோவன் வணக்கம்.

Good morning.

peṇṇaip pārttal Seeing the girl

பெண்ணைப் பார்த்தல்

iḷaṅkōvan enna kamalā! mātavi(y)e(k) kūppiṭu.

இளங்கோவன் என்ன கமலா! மாதவியை(க்) கூப்பிடு.

[dear Kamala Mathavi Acc. call]

Kamala! please call Mathavi.

kamalā itō, aḷacci(k)kiṭṭu varēn[13].

கமலா இதோ, அழைத்து(க்)கொண்டுவருகிறேன்.

[here bring I]

I will bring her.

---

13. See note 5:14.

mātavi	vaṇakkam.		
மாதவி	வணக்கம்.		
	Good morning.		
kōmati	ippaṭi[14]	ukkāru'mmā.[15]	
கோமதி	இப்படி	உட்காரம்மா.	
	[here	sit down lady]	
	Please sit down here.		
viṉāyakam	eṉṉa'mmā!	eṉṉa	paṭiccirukkē?
விநாயகம்	என்னம்மா!	என்ன	படித்து இருக்கிறாய்?
	[hello lady	what	have studied you]
	Lady! what is your qualification?		
	[What (you) have studied?]		
mātavi	pi.ē.	paṭiccirukkēṉ.	
மாதவி	பி.ஏ.	படித்து இருக்கிறேன்.	
	[B.A.	have studied I]	
	I have got a B.A. [I have studied B.A.]		

---

14. *ippaṭi* இப்படி c.f. 6.28.

15. *-mmā* (< *ammā*) அம்மா is uesd to express the affection or love. If the addressee is a male person *-ppā* அப்பா is used.

vināyakam appaṭiyā!

வினாயகம் அப்படியா!

Really!

kōmati pāṭṭellām pāṭa(t) teriyum-ā?

கோமதி பாட்டெல்லாம் பாட(த்) தெரியுமா?

[songs all to sing know-Int.]

Do you know how to sing?

[Do (you) know to sing songs?]

kamalā nallā(p) pāṭuvā-ṅka. caṅkītam

கமலா நன்றாக(ப்) பாடுவாளுங்க. சங்கீதம்

[well sing will she Hon. music

paṭiccirukkā.

படித்திருக்கிறாள்.

has studied she]

She sings well. She has studied music.

kōmati eṉṉa'mmā mātāvi ! camayalellām

கோமதி என்னம்மா மாதவி ! சமைய'ல் எல்லாம்

[hello lady Mathavi cooking all

teriyumā?

தெரியுமா?

know Int.]

Mathavi ! Do you know how to cook?

[Do (you) know cookings?]

mātavi	cumārā(p)	paṇṇuvē-ṅka.
மாதவி	சுமாராக(ச்)	செய் வேன்-ங்க.
	[satisfactorily	will do I Hon.]
	I will do it satisfactorily.	

muṭivu ceytal — **Deciding**

முடிவு செய்தல்

viṉāyakam	eṉṉa	pālaṉ!	uṉakku(p)	peṇṇe(p)
வினாயகம்	என்ன	பாலன்!	உனக்கு (ப்)	பெண்ணை (ப்)
	[hey	Balan	you Dat.	bride Acc.
	piṭiccirukkā?			
	பிடித்திருக்கிறதா?			
	have liked Int.]			
	Balan! Do you like the bride?			

pālaṉ	piṭiccirukku.
பாலன்	பிடித்து இருக்கிறது.
	[have liked]
	Yes, I do.

viṉāyakam	eṉṉaṅka	iḷaṅkōvaṉ	cār !
வினாயகம்	என்னங்க	இளங்கோவன்	சார் !
	[hello	Ilankovan	Sir

	māppiḷḷekku(p)	poṇṇe(p)	piṭiccittutām.[16]
	மாப்பிள்ளைக்கு(ப்)	பெண்ணை(ப்)	பிடித்து விட்டதாம்.
	bridegroom Dat.	bride	have liked-Report.]

Ilankovan Sir ! The bridegroom likes the bride.

[It is said that the bridegroom likes the bride]

iḷaṅkōvaṉ	appaṭiṉṉa	cari !	muṭivu
இளங்கோவன்	அப்படியென்றால்	சரி !	முடிவு
	[if so	O.K.	decision

paṇṇiṭa-lām.[17]

செய்துவிட-லாம்.

have to do-can]

If so we can settle it.

vināyakam	etukkum[18]	poṇṇe	oru
விநாயகம்	எதற்கும்	பெண்ணை	ஒரு
	[anyway	bride Acc.	one

---

16. *piṭiccittutām* < [*piṭicc* (V.P.) -*iṭ* (Defi. Aux.) -*ṭ* (Pa.) -*ut* (< *utu* P.T,) -*ām* (Report. Suf.)
பிடித்து- விட்-ட்-அத் (< அது) -ஆம்

17. *muṭivu paṇṇu* முடிவு செய் 'settle' 'fix' 'decide'
paṇṇiṭalām <[*paṇṇi* (V.P. of *paṇṇu*) -*iṭ* (Defi. Aux.)-*a* Inf.) -*lam*) (Mod.)]

18. *etukkum* an idiomatic expression means 'any way' or 'by the by'.

vārtte kēṭṭu(k)kōṅka

வார்த்தை (க்) கேட்டு (க்) கொள்ளுங்கள்.

word ask yourself Hon]

Anyway please enquire with the bride whether she likes the groom or not. [Any way ask a word to the bride.]

iḷaṅkōvaṉ eṉṉa kamalā! mātavi eṉṉa

இளங்கோவன் என்ன கமலா ! மாதவி என்ன

[hello Kamala Mathavi what

collurā?

சொல்லுகிறாள்?

says-she]

Kamala! What does Mathavi say?

kamalā avaḷukkum māppiḷḷe(y)e(p) piṭiccirukk-ām

கமலா அவளுக்கும் மாப்பிள்ளையை(ப்) பிடித்து இருக்கிறதாம்.

[her for also groom Acc. have liked-Report.]

She also likes the groom.

viṉāyakam cari! appuṟam[19] eṉṉa vettele

வினாயகம் சரி! அப்புறம் என்ன வெற்றிலை(ப்)

[O.K. then what betal leaf

---

19. *appuṟam* அப்புறம் 'afterwards' 'then'

pākku māttiṭa[20] vēṇṭiyatu-tāṉ.[21]

பாக்கு மாத்திவிட வேண்டியதுதான்.

arecanut to exchange require Emph.]

O.K. Then what (else is needed)?

We have to exchange betal nut

tirumaṇa ērpātu parrip pēcutal Talking about

திருமண ஏற்பாடு பற்றிப் பேசுதல் marriage arrangements

viṉāyakam eṉṉa iḷaṅkōvaṉ! vara paṅkuṉi[22]

விநாயகம் என்ன இளங்கோவன்! வருகிற பங்குனி

[hello Ilankovan which comes Panguni

mācam-ē kalyāṇatte vaccitalām-ē.

மாதமே கல்யாணத்தை வைத்துவிடலாமே.

month Emph. marriage Acc. can keep-Emph.]

Hello Ilangovan! We can conduct the marriage in the month of Panguni. [We can keep the marriage in the coming Panguni month itself.]

---

20. *māttiṭa* < [*mātti* (V.P. of *māttu*-)*ṭ* (Defi. Aux.) -*a* (Inf.)] மாத்தி-விட்-அ

When a marriage is settled both the parties exchange betal nut with other things as a token of confirmation.

21. *vēṇṭiyatu* வேண்டியது 'necessary, require, need'.

22. *vara paṅkuṉi* வருகிற பங்குனி expresses the sense 'Pankun month which follows' i.e., it denotes the first *paṅkuṉi* which follows.

iḷaṅkōvaṉ	ō,	tārāḷamā[23]	vaccitalām.
இளங்கோவன்	ஓ,	தாராளமாக	வைத்துவிடலாம்
	[Oh	certainly	can keep]

Oh ! certainly, we can.

kamalā	ēṅka[24] ! nāma		mātavikku
கமலா	ஏங்க !	நாம்	மாதவிக்கு
	[dear	we	Mathavii for

eṉṉa ceyyaṇuṅkiṟate[25](k)

என்ன செய்யவேண்டும் என்பதை (க்)

what have to do - is said -Acc.

kēṭṭu(k)kuṅka.

கேட்டுக்(க்)கொள்ளுங்கள்.

ask yourself Hon.]

Darling ! please ask what we have to do for Mathavi?

[........ ask what is said to be done .for Mathavi.]

---

23. *tārālamā* தாராளமாக < [*tārāḷam* தாராளம் (N. 'abandant') -*ā* ஆக (Advr.]. It means 'abandantly', 'certainly.'

24. *ēṅka* is used in the sense of *eṉṉaṅka* c.f. 1.30, 3. 27.

25. *ceyyaṇuṅkiṟate* < [*ceyyaṇum* 'has to do' *eṅkiṟatu* (V.N. of *eṉ* 'say') -*e* (Acc.)]

iḷaṇkōvaṉ	viṉāyakam	cār !	nāṅka
இளங்கோவன்	வினாயகம்	சார் !	நாங்கள்
	[Vinayakam	Sir	we
	muppatu	pavuṉ[26]	nake
	முப்பது	பவுன்	நகை
	thirty	sovereign	jewel
	pōṭurōm.	kalyāṇatte	nāṇkaḷē
	போடுகிறோம்.	கல்யாணத்தை	நாங்களே
	put we	wedding Acc.	we Emph.
	naṭattiṭurōm[27].	vēṟe	ētāvatu
	நடத்திவிடுகிறோம்	வேறு	ஏதாவது
	conduct we	else	anything
	ceyyaṇumiṉṉā(c)[28]		colluṅka.
	செய்யவேண்டும் என்றால்		சொல்லுங்கள்.
	need to do if say		tell

26. one *pavuṉ* பவுன் is equal to 8 gms. of gold.
27. *naṭattiṭuṟōm* < [*naṭatti* (V.P. of *naṭattu* 'conduct') -*ṭ* (Defi. Aux.) -*ṟ* (Pr.) -*ōm* (P.T.)] நடத்தி-விட்-கிற்-ஓம்.
28. *ceyyaṇumiṉṉa* (Cond.) < [*ceyyaṇum* -*iṉṉa*' if say'] என்றால் if 'say'.

ceyyuṟōm.

செய்கிறோம்.

do we]

Vinayakam Sir ! We will contribute 30 sovereign jewels. We will conduct the marriage ourselves. Please tell (us) if anything else has to be done (and) we will do it.

viṉāyakam	ilaṅkōvāṉ	cār !	uṅka(p)
வினாயகம்	இளங்கோவன்	சார் !	உங்கள்
	[Iḷangovan	Sir	your
	poṇṇukku[29]	eṉṉa	ceyya
	பெண்ணுக்கு	என்ன	செய்ய
	daughter for	what	to do

virumpuṟīṅkaḷ-ō,[30] ate (c) ceñcukkīṅka.

விரும்புகிறீர்களோ அதை(ச்) செய்து கொள்ளுங்கள்.

like you that do yourself Hon.]

Ilangovan Sir ! please do what ever you like to do for your daughter.

---

29. *poṇṇu* here expresses the sense 'daughter'.

30. The suffix *ō* ஓ expresses the indefiniteness. So *eṉṉa ceyya virumpuṟīṅkaḷō* means 'what ever you like to do'.

iḷaṅkōvaṉ	rompa	nallatu.	
இளங்கோவன்	மிகவும்	நல்லது.	
	Very good.		
kamalā	eṉṉaṅka !	pēci(k)kiṭṭ-ē	
கமலா	என்னங்க !	பேசி(க்)கொண்டே	
	[dear	go on talking Emph.	
	irukkiṅkaḷ-ē.[31]	kāppi	cāppiṭa[32]
	இருக்கிறீர்களே.	காப்பி	சாப்பிட
	is present you-Emph.	coffee	to drink
	vēṇṭāmā?		
	வேண்டாமா?		
	not necessary Int.]		

Darling ! You have been talking for a long time. [you are going on talking]. Don't you want to serve coffee. [Is it not necessary (for them) to take coffee.]

---

